(எ) 1968-69-ம் ஆண்டில் மேலும் 18 லட்சம் மீட்டர் குழாய்கள் தேவைப்படுவதால், மிச்சமிருப்பதால் விரயம் ஏற்படுவதற்கிடமில்லை.

(ஏ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Electricity Board have purchased galvanised pipes only when the necessity for them was felt by them and while using them they did not incur any loss and it was all done in good faith?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : தேவையை எதிர்பார்த்துத்தான் வாங்கப்படுகிறது. மீதம் இருப்பதை, நாம் மேலும் மேலும் திட்டங்களைப் போட்டுக்கொண்டு வருகிற காரணத்தினாலே, அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே விரயம் ஆகப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலஞ்ச ஊழல்

*** 166 வினா. —திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

லஞ்ச ஊழலில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்ட சர்க்கார் ஊழியர்களின் மீது, நடவடிக்கை எடுப்பதுடன் 50 வயதுக்கு முந்தியே கட்டாய ஓய்வுமுறை அமுல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நடைமுறையிலே இதுபோன்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக 50 வயதிற்குள்ளாக கட்டாய ஓய்வு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற முறையை அரசாங்கம் எதனால் கையாளுகிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : முதலிலே தொடக்கக் கேள்வி பொதுவாக இருந்த காரணத்தினாலே இப்படிப்பட்ட பதில் சொல்லப் பட்டது. எப்படிப்பட்ட தண்டனை வழங்குவது என்பதுபற்றி இருக்கிற சாட்சியங்களைப் பொறுத்தும், விசாரணை செய்கின்ற அதிகாரியின் முடிவைப் பொறுத்தும் இந்தக் கட்டாய ஓய்வு முறை மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : லஞ்ச ஊழல்கள் சம்பந்தமான வழக்குகள் கண்டு பிடிப்பதற்கும், நெல் கொள்முதல் சம்பந்தமாக கடத்தல் பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கும் தனியாக ஒரு விஜிலன்ஸ் ஸ்குவாட் இருக்கிறது. அதை எடுக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மை தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிப்பட்ட ஒரு அமைப்பு உணவுத் துறையின் கீழே செயல்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், லஞ்ச ஊழல்கள், கடத்தல் பொருள்கள் சம்பந்தமாக, கடத்தல் பொருள்கள் எல்லாம் ஒரு போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் வீட்டிலே தர்மபுரியிலே கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதுபோன்ற காரியங்கள் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கேள்வி, சர்க்கார் ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதுபற்றி. ஆகவே இந்தக் கேள்வி தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : லஞ்ச ஊழல்கள் வேறு, கடத்தல் வேறு, லஞ்ச ஊழல்கள் சம்பந்தமாக இப்பொழுது உள்ள தண்டனை என்ன ? இன்னும் அதைக் கடுமையாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லஞ்ச ஊழல்கள் சர்க்கார் ஊழியர்கள் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டால் பதவியிலிருந்தே விலக்கப்படுகிறார்கள். அதைவிடக் கடுமையான தண்டனை அவர்களுக்கு எதுவும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : வழக்குகளைத் தொடர்ந்து நிரூபிக்க முடியாத நிலைமையிலேகூட கட்டாய ஓய்வு முறை கையாளப்படுகிறது என்பது கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே நிரூபிக்கப்படாத நிலைமை இருக்குமானால், அவர்கள் கட்டாய ஓய்வில் செல்லக்கூடிய வகையில் கட்டுப்படுத்தக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி எதைப்பற்றியாவது குறிப்பிட்டு எழுதினால் கவனிக்கலாம்.

Republic Day Celebrations

* 167 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the National Cadet Corps participated in the parade held in connection with the Republic Day Celebrations held on 26th January 1968 in the City;

(*b*) whether the colourful pageantry usually presented as part of the parade was also missing this year; and

(*c*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) அப்போது பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தமையால், தேசீய மாணவர் படையினர் பயிற்சி பெறுவதற்குப் போதிய காலம் இராது எனக் கருதப்பட்டது. எனவே, தேசீய மாணவர் படையினர் குடியரசு நாள் விழாவில் பங்குபெறத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

1968 ஜனவரி 3-ம் தேதியன்று, உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக சென்னை மாநகர் மகத்தான அலங்கார பேரணிக் காட்சியைக் கண்ணுற்றது. ஆகையால், குடியரசு நாளன்று மற்றொரு அலங்கார அணி விழா தேவை இல்லை எனக் கருதப்பட்டது.

திரு. கே. விநாயகம் : குடியரசு விழா கொண்டாடியபோது நமது நகரத்திலே கல்லூரிகள் மூடப்பட்டதன் காரணமாகத்தான் என்.சி.சி. பேரேட் இல்லையா ? ஆட்சியினுடைய கொள்கைப்படி என்.சி.சி.யில் இந்தியைக் கையாளக்கூடாது என்று சொல்லி என்.சி.சி. இந்த ஆண்டு இயங்காமல் செய்துவிட்டதாலே தான் என்.சி.சி. பேரேட் வரவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் குறிப்பிட்ட கேள்வி கேட்கப்பட்டது 1968ஆம் ஆண்டு. கல்லூரிகள் மூடப்பட்ட நேரத்திலே குடியரசு விழாவில் தேசிய மாணவர் படை கலந்துகொள்ளவில்லை என்றுதான் பதில் தெரிவித்தேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தேசீய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஏதாவது தமிழக அரசு வைத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி மாற்றுத் திட்டமொன்று அமைப்பதற்கு ஜூன், ஜூலையில் துவக்கலாம் என்ற அளவில் அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.